# மாத்தறை மாநகர சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மாத்தறை மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 256,483 இற்கான ஆயுள்வேத மருந்து மீதி இருப்பு மற்றும் ரூபா 526,812 தொகைக்கான வாகனங்கள் கழுவும் நிலையத்தின் மீதி இருப்பு என்பவற்றை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நேரடிக் கொள்வனவுகள் நேரடிப் பாவணைக்காக வழங்குதல் மேற்கொள் ளப்படுகின்றது. |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியளவில் விஹாரைகளுக்கு அறநெறிப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் திட்டத்திற்காக ரூபா 200,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன்கொடுத்தோர் பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை செலவுகளுக்காக கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 6,480,445 தொகை குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிர்மாண வேலைகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை ஏற்பாடுகள் என வழங்கப்பட்டுள்ளமை, கடன்கொடுத்தோர்/ கடன்பட்டோர் பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாண வேலை கடன்பட்டோருக்காக ரூபா 3,416,811 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிர்மாண வேலைகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ஏற்பாடுகள் என வழங்கப்பட்டுள்ளமை கடன்கொடுத்தோர்/ கடன்பட்டோர் பதிவேட்டில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 45,992,645 தொகைக்கான பங்களிப்புத் தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | மீளாய்வாண்டில் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகைக்காக செலுத்தியிருந்த கடன்வட்டி ரூபா 397,506 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வட்டித் தொகையினை கணக்கீடு செய்தல் வங்கி இணக்கக் கூற்று கிடைத்த பின்னர் மேற்கொள்ளப்படும். |
| (vii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 759,550 தொகைக்கான அலுவலக உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (viii) | கடந்த ஆண்டில் விற்பனையின் போது அகற்றப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் கிரயத்தை அறுதியாக இனங்கண்டு முதல் வந்து முதல் செல்லல் (FIFO) முறையில் ரூபா 1,351,273 தொகை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சான்று ஒன்று இன்மையால் பழைய பெறுமதியின் அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட அகற்றல்களை கணக்கீடு செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ix) | 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 331,829 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சான்று ஒன்று இன்மையால் பழைய பெறுமதியின் அடிப்படை யாகக் கொண்டு குறிப்பிட்ட அகற்றல் களை கணக்கீடு செய்யப்பட்டது. |
| (x) | கூட்டுப்பெறுமதி ரூபா 13,701,000 தொகைக்கான 05 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் பெறுமதியினை இனங்கண்டிருக்காத 04 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 153,788,163 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காணப்படும் மீதிகள் இடையே, கூட்டுத்தொகை ரூபா 26,773,192 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதி களின் வித்தி யாசங்களை இணக்கஞ் செய்து கணக் குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனங்கண்ட பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமை யினால் கூட்டுத்தொகை ரூபா 108,166,858 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியா திருந்தது. | நிதிக்கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளது வரை ஆக்குவதற்கு, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பெற்று சமர்ப்பிப்பதற்கு மற்றும் விரிவான அட்டவணைகள் சரியான முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 254(அ) | சபைக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து வரிகள், தண்டப்பணம் மற்றும் தண்டம் ஒன்றான பணம் அறவிடப்பட்டு அந்தப் பணத்தை மாநகர சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகள் எடுத்தல் நகர ஆணையாளரின் கருமம் எனினும், கடந்த ஆண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 443,800,641 இற்கான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | முத்திரைக் கட்டணம், பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம், வீதி விளக்குகள் தொடர்பாக பெற வேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளதுடன் ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மாநகர சபைக்கு சொந்தமான 38 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிதல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களின் போது எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2015 ஜூலை 10 திகதிய 2/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பாவணையில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 11,278,000 தொகை பெறுமதியான 92 வாகனங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் 2019 மே 03 திகதி அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 132,779,713 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 157,500,775 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 வருடங்களுக்கும் 27 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியைச் சேர்ந்த ரூபா 34,943 தொகைக்கான 10 மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 189 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அறுதியான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமையினால் சபைக்கு சமர்ப்பித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுகின்றேன். |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கொள்ளையடிக்கப்பட்டுள்ள காசு மீதியொன்று உட்படுத்தப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 169,360 இற்கான போலி சொத்துக்கள் அடங்கியிருந்ததுடன் குறிப்பிட்ட பணம் கொள்ளையடித்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கொள்ளையடிக்கப்பட்ட பணமீதி தொடர்பாக தெளிவான தகவல் ஒன்று அறியப்படாமையால் குறிப்பிட்ட மீதி கடந்த வருடங்கள் முதல் காணப்படுவது ஒன்றாகும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 41,384,570 | 38,481,722 | 43,527,300 | 56,075,504 | 37,073,065 | 38,595,208 | 37,544,395 | 60,368,667 |
| வாடகை | 26,381,440 | 30,606,691 | 29,824,618 | 58,759,275 | 27,671,963 | 28,038,858 | 27,203,800 | 63,668,754 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 26,874,700 | 30,135,817 | 25,683,882 | 1,386,660 | 18,802,100 | 27,103,902 | 24,387,784 | 1,386,660 |
| ஏனைய வருமானங்கள் | 93,542,300 | 113,606,910 | 4,791,667 | 327,579,202 | 84,102,800 | 118,580,281 | 5,514,055 | 236,999,202 |
| மொத்தம் | 188,183,010 | 212,831,140 | 103,827,467 | 443,800,641 | 167,649,928 | 212,318,249 | 94,650,034 | 362,423,283 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 188,183,010 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 362,423,283 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 212,831,140 தொகை உடன் ரூபா 575,254,423 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 103,827,467 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 443,800,641 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை என காட்டப்பட்டுள்ள ரூபா 443,800,641 தொகையில் கூடுதலான பெறுமதியாகிய ரூபா 333,686,089 முத்திரைக் கட்டணம், பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் வீதி விளக்குகளுக்காக பெற வேண்டிய தொகைகளாகக் காணப்படுவதுடன் ஏனைய வருமானங்கள் சிட்டையிடல் உடன் ஒப்பாக ஆண்டின் போது சேகரிப்புக்களில் தெளிவான முன்னேற்றம் ஒன்றினை காட்டுகின்றது. |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **வீதவரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 59,939,093 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 36,696,436 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 96,635,529 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 40,780,935 தொகை அதாவது 42 சதவீத பெறுமதியினைக் கொண்டிருந்தமையால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 55,854,594 தொகை அளவு உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கணக்கீட்டு வழு ஒன்றின் காரணமாக இது ஏற்பட்டிருந்தது. அதனை இனங்கண் பின்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **கடை வாடகை**<br>ஆரம்ப நிலுவை ரூபா 51,760,590 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 22,411,271 தொகையான ஆண்டிற்கான, சிட்டையிடலுடன் ரூபா 74,171,861 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப் பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 20,600,086 தொகை அதாவது 27 சதவீத பெறுமதியினைக் கொண்டிருந்தமை யினால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 53,571,775 தொகை அளவு உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வர்த்தக வரி**<br>ஆரம்ப நிலுவை ரூபா 812,900 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 6,340,400 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 7,153,300 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,483,550 தொகையாகக் காணப்பட்ட மையால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 1,669,750 இற்கான பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் 48 சதவீதம் அறவிட்டுள்ளதுடன் மீதித் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) விளம்பரப் பலகைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 3,233,175 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 18,522,908 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 21,756,083 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப் பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 14,927,823 தொகை அதாவது 25 சதவீத பெறுமதியனை கொண்டிருந்தமை யால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 6,828,260 இற்கான பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் 48 சதவீதம் அறவிட்டுள்ளதுடன் மீதித் தொகை அறவீடு செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

## 2.3.6 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 764,995 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 332,178,721 தொகை முத்திரைரைக் கட்டணம் பெற வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் எதிர்காலத்தில் கிடைக் கக் கூடியதாக காணப்பட்ட துடன் முத்திரைக் கட்டணம் வழங்குதல் வரையறுக்கப் பட்டுள்ளமையால் வருமானம் சபைக்கு கிடைக்காத நிலை மையொன்று ஏற்பட்டுள்ளது. |

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றுகை

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------------------------- | ------------------ | ---------------------------------------------- |
| **(அ)** | **செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**<br>---------------------------------------------------------- | | |
| | குப்பைகளை பயன்படுத்தி உயிர் வாயு உற்பத்தி செய்து அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக ரூபா 249,834,000 இற்கான பெறுமதி உடைய செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு 2014 ஆகஸ்ட் 08 திகதி தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட் டிருந்தது. செயற்திட்டம் 2015 ஜனவரி 01 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பின்வரும் காரணங்கள் நிறை வேற்றப்படாமையால் மீளாய் வாண்டு இறுதி வரையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | தேவையான வற்றை திரட்டி செயற்திட்டத் தை விரை வாக பூர்த்தி செய்ய வேண்டும் | செயற்திட்டத்தினை நிர்மாணி த்தல் அலுவல்கள் பல சந்தர்ப்பங்களில் இடைநிறுத் தப்பட்டிருந்ததுடன், செயற் திட்டத்திற்கு தேவையான சட்ட ஆவணங்கள் மற்றும் அங்கீகாரம் முதலீட்டு கம்பனிக்கு கிடைக்கப் பெறாமையால் 2018 பெப்ரவரி மாதம் முதல் செயற்திட்டத்தின் நிர்மாண அலுவல்கள் மீண்டும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. |
| (i) | மின்சார சபையினால் மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான இணக்கம் தெரிவித்தலை (Letter of Intent/ L.O.I) குறிப்பிடும் கடிதம் கிடைத்திருக்காமை. | | |
| (ii) | மின்சார உற்பத்தி செய்வதற்காக அனுமதிகள் தொடர்பான நிலைபெறுதகு வலு அதிகார சபை யினால் வழங்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரம் இது வரை பெற்றிருக்காமை. (Energy permit) | | |
| (iii) | மின்சாரம் கொள்வனவு செய்தல் தொடர்பாக மின்சார சபையுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண் டிருக்காமை. (Power Purchasing Agreement/P.P.A) | | |
| (iv) | மேற்கொண்டிருந்த உடன்படிக்கை யின் பிரகாரம் செயற்திட்ட அறிக்கையில் விற்பனை செய்வதற் காக எதிர்பார்க்கும் மின்சார அலகு ஒன்றின் விலைகள் குறிப்பிடப்பட்டி ருக்காமையால் மின்சாரம் விற்பனை செய்யும் இணக்கம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றுதல். | | |

| | | | |
|---|---|---|---|
| (v) | ஏதேனும் கால சட்டகத்தில் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்தல் தொடர்பாக இரண்டாவது உடன் படிக்கையில் நிபந்தனைகள் காணப்படாமை. | | |
| (vi) | மத்திய சுற்றாடல் அதிகார சபை யினால் தொழிநுட்ப மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்படாமல் ரூபா 64,356,400 தொகை விடுவிக்கப் பட்டிருந்தமை. | | |
| **(ஆ)** | **திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**<br>------------------------------------------------------------ | | |
| | மீளாய்வாண்டின் போது குப்பை கள் சேகரிப்பதற்காக ரூபா 112,261,450 தொகை மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத் துவத்திற்கு ரூபா 102,438,890 தொகை என ரூபா 214,700,340 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதிகாரப் பிரதேசத்தில் வருடாந்தம் சேகரமாகும் கழிவுப்பொருட்களின் அளவு 9,414 டிரக்டர் லோட்கள் என இனங்கண்டிருந்ததுடன் அவற்றில், 8,810 டிரக்டர் லோட் அளவு தொகையொன்று சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்டு 604 டிரக்டர் லோட் மாத்திரம் மீள்சுழற்சி செய்யப்பட்டிருந்தது. 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான செயற்பட்டு வருமானத்தில் 27 இற்கும் 39 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவு தொகை ஒன்றிற்கான செலவுகள் மேற்கொண்டிருந்த போதிலும் நாளாந்தம் சேகரமா கும் கழிவுப் பொருட்களின் அளவினை குறைத்துக் கொள்ளும் விதத்தில் முகாமைத்துவம் செய்தல் நடைபெற்றிருக்கவில்லை. | கழிவுப் பொருட்கள் உரிய விதத்தில் அகற்றப்பட வேண்டும். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் இலக்கம் 129 இன் படி செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(இ) சுற்றாடல் சிக்கல்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2015 ஆண்டு முதல் 04 இற்கான வருட காலப்பகுதியில் மீள்சுழற்சி செய்யக்கூடிய உக்கக் கூடிய குப்பைகள் 30,725 டிரக்டர் லோட்கள் மற்றும் மீள்சுழற்சி செய்ய முடியாத குப்பை 1,661 டிரக்டர் லோட்கள் என மொத்தம் குப்பை 32,391 டிரக்டர் லோட்கள் அளவு முறையற்ற விதமாக மற்றும் முறைசாராத விதமாக கொடவில குப்பை முற்றத்திற்கு அகற்றப்படுவதினால் குப்பை மலை ஒன்று உருவாகியிருந்தது. இந்த குப்பை மலையை சமப்படுத்துவதற்காக 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு அக்தோபர் மாதம் வரை சபையில் பெக்கோ இயந்திரத்திற்கு 2,703 மணித்தியாலங்களுக்காக எரிபொருள் செலவாக ரூபா 1,305,907 தொகை மற்றும் தனியார் பெக்கோ இயந்திரத்திற்காக ரூபா 2,632,745 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றாடல் சிக்கல் ஏற்படாத முறையில் குப்பை அகற்றப்பட வேண்டும். | முன்னர் காணப்பட்ட சேதனப் பசளை முற்றம் மற்றும் குப்பை வகைப்படுத்தும் வளவு என்பன தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கியிருந்தமையால் சேதனப் பசளை உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் குப்பை மலை தொடர்பாக தீர்வு ஒன்று பெற்றுக்கொடுப்பதுடன், சபையில் பெக்கோ இயந்திரம் போதியளவாகக் காணப்படாமையால் வாடகை அடிப்படையில் ஸ்கவேடர் இயந்திரம் ஒன்று பெறப்பட்டது. |
| (ii) | குப்பை மலை உருவாகியதுடன் டெங்கு மற்றும் ஏனைய நோய்கள் பரவக் கூடிய ஆபத்து நிலை அதிகரித்திருந்தது. குப்பைகளில் இருந்து ஒழுகும் அழுகிய நீர் சுற்றாடலுடன் கலப்பதினால் வாயு மாசடைதல், மற்றும் குப்பை முற்றத்தில் அண்மித்து காணப்படும் நீர் ஓடைக்கு முற்றத்தில் இருந்து அகற்றப்படும் அசுத்த நீர் சேர்க்கப்படுவதினால் நீர் ஊற்றுக்கள மாசடைதல் நாளாந்தப் பொது மக்கள் எதிர்ப்புக்கள் அதிகரித்திருந்தது. | சுற்றாடல் சிக்கல் ஏற்படாத முறையில் குப்பைகள் அகற்றப்பட வேண்டும். | குப்பைகளை பரப்பும் விடயம் மேற்கொள்ளப்படல் மற்றும் மூன்று நாட்களுக்கு ஒருமுறை புகை அடித்தல், துர்நாற்றத்தை கட்டுப்படுத்துவதற்காக இரசாயனப் பொருட்கள் விசிரும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2012 ஆண்டின் போது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 2,680,000 தொகை செலவிடப்பட்டு 10 மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றில் 06 மோட்டார் சைக்கிள்கள் பல்வேறு திருத்த வேலைகளின் காரணமாக ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்த மோட்டார் சைக்கிள்களின் கொள்வனவின் போது உதிரிப் பாகங்கள் பெற்றுக்கொள்ளல் சேவை பெற்றுக்கொள்ளல், போன்ற காரணங்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காமையால் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 1,608,000 தொகை பெறுமதியான 06 மோட்டார் சைக்கிள்கள் உதிரிப் பாகங்கள் பெற முடியாமையினால் உக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது. | கொள்வனவு செய்யும் போது அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | திருத்த வேலைகள் தொடர்பாக முகவர் நிலையத்தினால் பதில் கிடைக்காமையால் மோட்டார் வாகன பரிசோதகர் மூலம் பரிசோதனை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| சபையின் சிரேஷ்ட நிலையில் 03 பதவி களும், மூன்றாம் நிலையில் 01 பதவியும், இரண்டாம் நிலையில் 20 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 73 பதவிகளும் வெற்றிடங்களாகவும், இரண்டாம் நிலையில் மற்றும் ஆரம்ப நிலையில் உள்ளவாறான பதவியணியில் அடங்கியுள்ள 09 மிகைப் பதவிகள் உட்பட 131 மிகை பதவியணியை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆளணி பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப நிலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் மிகை பதவிகளுக்காக அங்கீகாரம் பெறுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 122 ஒப்பந்த அடிப்படை பதவிகள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 40 உப பிரிவு (1)(அ) இன் பிரகாரம் மாநகர முதல்வரும் வழங்கியுள்ள அதிகாரம் மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்க்கப்பட்டுள்ளது. |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி அளவில் 10 வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்ற, இறந்த, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஊழியர்களின் இடர்கடன், விழா முற்பணம், விஷேட கடன், வாகனக் கடன் மற்றும் வெள்ள முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 330,229 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | ஊழியர் கடனை விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | 10 வருடங்களை கடந்துள்ள அறவீடு செய்வதற்கு இயலாத கடன் மீதிகள், சபை தீர்மானத்தின் பிரகாரம் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 22 புல் வெட்டும் இயந்திரங்களுக்கு 4,200 லீட்டர் எரிபொருள் பயன்படுத்து வதற்காக ரூபா 582,790 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஏடுகள் பேணப்பட்டிருக் காமையினால் ஒவ்வொரு இயந்திர த்திற்கும் வழங்கப்பட்ட எரிபொரு ளின் எண்ணிக்கை எரிபொருள் எந்த காலப்பகுதிக்காக வழங்கப் பட்டது மற்றும் மீதியாக உள்ள எரிபொருளின் அளவு தொடர்பாக கணிக்க முடியாதிருந்தது.<br><br>எரிபொருள் விநியோகித்தலுக்கு குறிப்பிட்ட படிவம் ஒன்று பயன்படுத் தாமை, ஒவ்வொரு இயந்திரத்தி ற்கும் எரிபொருள் பயன்படுத்தல் தொடர்பாக பதிவுகள் அறிக்கை அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | முறையான உள்ளகக் கட்டுப்பாட் டுக்கு எரிபொருள் வழங்கப்பட வேண்டும். | எரிபொருள் விநியோகத்திற்காக படிவம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. 2019 மே மாதம் ஆரம்பத்தில் இருந்து எரிபொருள் பதிவேடு ஒன்று அறிமுகப்படுத்தி யிருந்ததுடன் அது தற்போது நாளது வரை பேணப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக காப்புறுதி உள்ளடக்கம் பெற்றிருந்த 203 வாகனங்கள் மாநகர சபையில் காணப்பட்டதுடன் நிரந்தர சாரதிகள் 39 பேருக்கு அந்த வாகனங்களின் கடமைகள் சாட்டுதல் செய்த போது வாகனங்களை எழுத்துமூலமாக ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | வாகனங்களின் கடமை சாட்டு தல் செய்யும் போது எழுத்து மூலம் ஒப்ப டைத்தல் மேற்கொள்ளப் பட வேண்டும். | வாகனங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வாகனங்களின் தொழிநுட்பம் அல்லாத குறைபாடுகளை இனங்கண்டு குறிப்பிட்ட படிவம் ஒன்று தயாரித்து சாரதிகளுக்கு எழுத்துமூலம் வாகனங்கள் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது எரிபொருள் செலவு என ரூபா 9,619,157 இற்கான தொகை ஒன்று செலவிடப் பட்டிருந்ததுடன், வாகனங்களுக்கு கடமை தேவைகளின் மீது எரிபொருள் நுகர்வின் உச்சமட்ட எல்லை பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு வரையறைகளை மிகைக்கும் சந்தர்ப்பங்களில் விஷேட அங்கீகாரம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதன் மூலம் எரிபொருள் நுகர்வை கட்டுப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எரிபொருள் நுகர்வு தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஒன்று ஏற்படுத்த வேண்டும் | எதிர்காலத்தில் ஒவ்வொரு வாகனத்திற்கும் எரிபொருள் தொடர்பாக உச்சமட்ட எல்லை பேணுவதற்கும், அந்த வரையறையினை மிகைக்கும் போது விஷேட அனுமதியொன்று பெறுவதற்கும் நடவடிக்கை எடுப்பேன் |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| தார் கொள்வனவுகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற் கொள்ளப்பட வேண்டும் என மாவட்ட விலை குழுவினால் அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது 175 தார் பீப்பாக்கள் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,025,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | விலை குழு வின் தீர்மானத் தின் பிரகாரம் செயற்பட வேண்டும். விலகும் சந்தர்ப்பங் களில் அங்கீ காரம் பெற வேண்டும். | கொள்வனவு செய்யும் போது பெறுகை குழுவின் தீர்மானம் மற்றும் நிருவாகக் குழுவின் அங்கீகாரத்தின் மீது கொள்வனவு மேற் கொள்ளப்பட்டது. |

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| நேர்வேலை அடிப்படையின் மீது நிர்மாண வேலைகளை நிறைவேற் றுவதற்காக 05 பண்ட விடயங்கள் கொள்வனவு செய்த போது மாவட்ட விலை குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட விலையை விட கூடிய விலைகக்கு கொள்வனவு செய்திருந்தமையால் ரூபா 678,018 இற்கான நட்டமொன்று சபை நிதியத் திற்கு ஏற்பட்டிருந்தது. | மாவட்ட விலைக் குழு வின் தீர்மானத் தின் பிரகாரம் செயற்பட வேண்டும். விலகும் சந்தர் ப்பங்களில் அங்கீகாரம் பெற வேண்டும். | மாவட்ட கூறுவிலைகளின் படி துண்டுக்கற்கள் வழங்கும் நிறுவனங்கள் காணப்பட வில்லை. |

## 3.7 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நேர்வேலை அடிப்படையில் 43 நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 6,177,479 இற்கான பல்வேறு கட்டிடப் பொருட்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் அந்த பண்டங்களில் ரூபா 5,968,045 தொகை பெறுமதியான பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்படாமையால் நேர்வேலை மூலம் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் மற்றும் உழைப்பு உரிய முறையில் பயன்படுத்தி குறிப்பிட்ட வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருந்தனவா என கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிர்மாண வேலை கோவைகளில் அனைத்து விபரங்களும் அடங்க வேண்டுயதுடன் முறை சார் விதமாக பண்ட மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் | நிர்மாண வேலைக்காக செலவிடப்படும் பண்டங்கள் மற்றும் உழைப்பு அடங்கலாக வேலை விடயங்களுக்கு உரிய விதத்தில் பண்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு காணப்பட்டது. நிர்மாண வேலைகளில் வழங்கல் கட்டளைகளின் பிரதிகள் விரைவாகப் பெற்று கோவை படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத உழைப்பு தொடர்பாக செக்ரோல் தற்போது நிர்மாண வேலை கோவைகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிர்மாண வேலை பூர்த்தி செய்த பின்னர் வேலை பூர்த்தி செய்ததற்கான அறிக்கை உரிய கோவைகளில் உட்படுத்தப்படுவதுடன் அவ்வாறு செய்வதற்கு முடியாத நிர்மாண வேலைகளுக்காக வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை தயாரித்து கோவைகளுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (i) | ஒவ்வொரு நிர்மாண வேலைகளுக்கும் மதிப்பீடு மற்றும் உழைப்பு பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காமை. | | |
| (ii) | குறிப்பிட்ட நிர்மாண வேலைக்காக களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த பண்டங்களின் வழங்கள் கட்டளைகளின் பிரதிகள் நிர்மாணவேலை கோவைகளில் உட்படுத்தியிருக்காமை. | | |
| (iii) | ஒவ்வொரு நிர்மாண வேலைக்கும் பயன்படுதப்பட்ட பயிற்றப்பட்ட உழைப்பு மற்றும் பயற்றப்படாத உழைப்பு தொடர்பாக செக்ரோல் நிர்மாண வேலை கோவைகளினை உட்படுத்தியிருக்காமை. | | |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிர்மாண வேலை முடிவில் பூர்த்தி செய்யப்பட்ட வேலை அறிக்கை தயாரிக்கப்பட்டு மீதிப் பொருட்கள் களஞ்சியத்திற்கு ஒப்படைத்திரு க்காமை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 03 பாதைகள் நேர்வேலை அடிப்படை யில் 16.23 கனமீற்றரில் கொங்கிரீட் பண்ணப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் கொங்கிரீட் பரப்பப்பட்ட பாதையின் வலுவினை பரிசோதித்து அறிக்கை பெற்றிருக்கவில்லை. | கொங்கிரீட் பண்ணிய பின்னர் குறிப் பிட்ட காலப் பகுதியில் வலுவினை பரிசோதிக்கும் அறிக்கை பெறப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தரப் பரிசோதனை அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 செலவு விடயங்களில் சேமிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 57,627,766 தொகை ஆகக் காணப்பட்டதுடன் அந்த பெறுமதி கள் 12 சதவீதம் முதல் 46 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | கூட்டு மொத்தமாக பாதீட்டு வரையறையினுள் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 4.2 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி ஆணையாளரின் 1984 நவம்பர் 20 ஆந் திகதிய 1984/19 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 8.1 இனை தவறாக விளக்கமெடுத்து, முத்திரை கட்டண வருமானம் சேகரிப்பதற்காக மாநகர சபையின் 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,365,965 இற்கான கமிஷன் செலுத்தப்பட்டிருந்தது. | தீர்க்கப்பட்டி ருக்காத கணக்காய்வு பந்திகள் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கமிஷன் தொகை செலுத்துவது நிறுத்தப்பட்ட பின்னர் வெளி இடங்களில் இருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணங் களில் இருந்து பணம் ஏதும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |